RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சைவ சித்தாந்தத்தில் காரண காரியம்

ச. கோகுல் கிருஷ்ணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641046, தமிழ்நாடு, இந்தியா

# The Causal Structure of Creation in Saiva Siddhanta Philosophy

**S. Gokul Krishnan** [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore - 641046, Tamil Nadu, India

* Corresponding Author: shanmugagokul@gmail.com

**ABSTRACT**

The relationship between cause and effect (kāraṇa–kārya) is a fundamental philosophical problem in Indian thought, particularly in discussions concerning the origin and manifestation of the universe. Different philosophical traditions offer distinct explanations of whether the world arises from an existing cause or comes into existence independently. Saiva Siddhanta maintains that the phenomenal world is brought into manifestation through causation and explains this process primarily through the doctrine of Satkāryavāda, according to which the effect exists in a potential form within its cause prior to manifestation. From this perspective, the emergence of the world is not understood as the production of something entirely new but as the manifestation of what already exists in a causal state. Saiva Siddhanta further explains the manifestation of the world through a threefold causal framework: the material cause, the efficient cause, and the auxiliary or instrumental cause. Within this framework, Māyā serves as the material basis from which the phenomenal world is manifested, while the other causal conditions facilitate and govern this process. The theory therefore provides a systematic philosophical explanation of the relationship between the causal state and the manifested state of the world. This study examines the concept of cause and effect in Saiva Siddhanta, with particular emphasis on Satkāryavāda and its threefold theory of causation. It analyses how Saiva Siddhanta establishes the causal relationship between Māyā and the manifested universe through philosophical reasoning and examines the significance of this theory within the broader framework of Indian philosophy. The study argues that Saiva Siddhanta presents causation as a systematic principle through which the transition from the causal state to the manifested world can be philosophically understood.

**Keywords:** Philosophical Traditions, Manifestation, Relationship, Saiva Siddhanta Philosophy.

## முன்னுரை

உலகம் உயர்திணை அஃறிணை பொருட்களை உள்ளடக்கியது. பல்வேறு பகுப்புகளை கொண்ட உலகை ஒருவன் உண்டாக்க உண்டானது என்றும் தானே உண்டானது என்றும் கருத்துக்களை சமயங்கள் முன்வைக்கின்றன. சைவம், உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்ற கருத்துடையது. உண்டாக்கப்படும் (இயக்கப்படும்) பொருள்கள் யாவும் காரண காரிய நிலை உடையது என்பதை வலியுறுத்துகின்றது. இந்திய மெய்யியல் மரபில் காரண காரிய தொடர்பு பல நிலைகளில் விளக்கப்பட்டிருந்தாலும் சைவ சித்தாந்தம் அதை சற்காரிய வாதத்தால் உறுதி செய்கின்றது.

## முப்பொருள் விளக்கம்

சைவ சமயத்தின் மெய்யியல் மரபினை சித்தாந்தம் என்று கூறுவர். இது முப்பொருள் கொள்கை உடையது. இறைவன், உயிர், மலம் என்று அதைக்குறிப்பிடுவர். இம்மூன்றும் தோற்றக்கேடு இல்லாதவை.

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்,

பதியினைப் போல் பசு பாசம் அனாதி' (திருமந்திரம்,பா.115)

சைவ சிந்தாந்தம் இம்மூன்றுபொருளையும் சித்து, அசித்து என்று இரண்டாகப் பிரிக்கின்றது. பதியாகிய இறைவனும் பசுவாகிய உயிரும் சித்துப்பொருட்கள். ஆணவம், கன்மம், மாயை மூன்றும் அசித்துப் பொருட்கள்.

## மாயைக் காரியப்பாடு

மலங்கள் மூன்றனுள் மாயையை இறைவன் தனு, கரண, புவன, போகங்களாக கரியப்படுத்தி உயிர்கள் அனுபவிக்கக் கொடுகின்றான். இந்தக் காரியப்பாட்டின் செயல்நிலையில் சைவ சித்தாந்தம் தனது காரண காரிய கொள்கையை நிலை நிறுத்துகின்றது. உலகம் உண்டாக்கப்படுவது (படைக்கப்படுவது) என்பது சைவ சித்தாந்தத்தின் கொள்கை. யார் உண்டாக்குகின்றார்?, எதிலிருந்து உண்டாக்குகின்றார்?, யாருக்காக உண்டாக்குகின்றார்?, உண்டாக்கத் துணைசெய்வது எது?, முதற்காரணமாக இருப்பது எது? ஏன்? என்பதை சைவ சித்தாந்தம் தர்க்க அடிப்படையில் விளக்குகின்றது. சிவஞான போத முதற்சூத்திரம் இதை விளக்கி நிற்கின்றது.

உலகம் படைத்தல், அழித்தல் என்ற நிலைவேறுபாடு அடைக்கின்றது. இங்கு படைத்தல் என்பது காரியப்படுத்துதல் என்றும் அழித்தல் என்பது காரணத்தில் ஒடுக்குதல் என்பதே. அதாவது தோன்றுவது என்பது "காணப்படாத நுண்ணிய நிலையிலிருந்து நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவதே" என்பதும், அழிவு என்பது "காணப்பட்ட பரு நிலையிலிருந்து நீங்கி முன்போல நுண்ணிலையை அடைதலே" என்பதாகும். இங்கு "காணப்படும் நிலையில் இருத்தல்" என்பதே இங்கு நிலை என்று குறிப்பிடப்படுகின்றது. சைவ சித்தாந்தம் இதை 'உள்ளது அழியாது இல்லது தோன்றாது' என்ற சற்காரிய வாதத்தால் நிலைநிறுத்தும்.

ஆமை ஒன்று தனது வெவ்வேறு உறுப்புக்களை வெளிப்படுத்தும். பின்னர், அவ்வுறுப்புக்களை உடலிற்குள் இழுத்தக்கொள்ளும். இவ்விரிவும், சுருக்கமும் தோற்ற ஒடுக்கங்களையும் விளக்குவன ஆகும். பொன்னில் இருந்து பல அணிவகைகள் செய்யப்படுகின்றன. அணிவகைகள் அழியுமம் போது மீண்டும் பொன் கட்டியாகின்றது. கட்டியாக உள்ள பொன் அணியாக மாறுகின்றது. படைத்தலும் அழித்தலும் இவ்வாறே அமைகின்றன.

## காரண - காரியம் விளக்கம்

ஒரு செயலுக்குரிய நேரடியான மூலப்பொருள் அல்லது நிலைப்பொருள் காரணம் என்று குறிப்பிடப்படுகின்றது. அந்த மூலப்பொருளில் இருந்து உருவாவது காரியப்பொருள் எனப்படும். ஒரு காரியத்திற்கு பல காரணப்பொருள்களின் கூட்டயக்கம் தேவைப்படும்.

"ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருளின் அடிப்பப்டை வேண்டும். பொருள்களது முதற்காரணம் (Material Cause) இன்றி ஒன்றும் தோன்றாது. அப்பொருளுக்கு இருப்பதைத் தருவது வடிவம். ஆதலின் வடிவ காரணம் (Formal Cause) மிக முக்கியமானதாக ஆகின்றது. ஆனால் வடிவம் பொருளிடத்து செயல் புரிய மற்றொன்றின் உதவி தேவையாகின்றது. அதுவே நிமித்த காரணம் (Efficient Cause) ஆகும். கடைசியாக தனித்த ஒவ்வொரு பொருளையும் தோற்றுவிப்பதற்கு ஒரு நோக்கத்தை ஏற்படுத்துவது அதன் கடைசி சாரணம் (Final Cause)" (நந்தினி சண்முகலிங்கம், 2018) என்று காரணத் தொடர்பை அரிஸ்டாட்டில் நான்காகக் கருதினார்.

விதையிலிருந்து செடி முளைப்பதற்கு நீர், மண் எனச் சூழல் துணை செய்யும். ஒவ்வொன்றும் இதில் காரியப்பட்டிருக்கின்றன. செடி என்ற ஒன்றை ஒரு காரியமாகக் கொண்டால், அதற்குக் காரணம் விதை என்பதே. ஆனாலும் அதில் துணைக் காரணங்களின் காரியப்பாடும் உண்டு என்பதை உணர்தல் வேண்டும்.

ஒரு காரியப்பொருள் ஒரு வினைமுதல் இன்றித் தனது காரணத்திலிருந்து தானே தோன்றித் தானே அழியம் என்பது சாத்தியமன்று, அவ்வாறு தானே தோன்றும் பொருள் ஒன்று உண்டாயின் அதற்கு அழியும் தன்மை இல்லை, தானே அழியும் என்றால் மீண்டும் அது தோன்றுதல் கூடாது. என்பதை சிவஞான சித்தியார்

ஒருபொருள், ஒருன் இன்றி, உளது இலது ஆகும் என்னில்

தருபொருள் உண்டேல் இன்றாம் தன்மை இன்று இன்றேல் உண்டாய்

வருதல் இன்று, இலது காரியம், முதல் உளதாகும், என்னில்

கருது காரியம் உண்டாய் தோற்றமும் கருத்தாவால் ஆம் (சிவஞான சித்தியார், பா.27)

என்ற பாடலில் விளக்குகின்றது. மேலும் காரியம் நுண்ணியதாய் அடங்கி நிற்கும், அது பின்பு பருப் பொருளாய் வெளிப்பட்டுத் தோன்றுதலும் ஒரு கர்த்தவால் நடைபெறும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

## மூவகைக் காரணங்கள்

சைவ சித்தாந்தம் உலகை உள்பொருள் என்ற வரையறையில் வைக்கின்றது. "அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார்" என்று சிவஞான போதம் முதல் நூற்பா உரைக்கின்றது. உலகம் ஒடுங்கிய நிலையில் காணப்படாத சூக்கும நிலையிலிருந்து பின் காணப்படும் தூல நிலையை அடைகின்றது. பிறகு ஒடுங்கி சூக்கும நிலையை அடையும் என்பதே கருத்து. இறைவனே உலகத்தைத் தூலம் சூக்குமம் என்ற நிலையடையச் செய்கின்றான். இதையே காரண காரிய நிலையாகும்.

உலகத் தோற்றத்தை காரண காரிய நிலையை சைவ சித்தாந்தம் உவமை வாயிலாக எடுத்துரைக்கின்றது

"காரிய காரணங்கள் முதல், துணை, நிமித்தம் கண்டாம்

பாரின் மண் திரிகை பண்ணும் அவன் முதல் துணை நிமித்தம்

தேரின் மண் மாணை ஆகத் திரிகைதன் சத்தி ஆக

ஆரியன் குலாலன் ஆய்நின்று ஆக்குவன் அகிலம் எல்லாம் (சிவஞான சித்தியார், பா. 38)

காரிய நிகழ்ச்சிக்குத் தேவைப்படும் காரணங்கள் மூவகைப்படும். அவை முதற்காரணம். அவை முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம என்பன. அக்காரணங்கள் தம்முன் ஒன்று இல்லாவிட்டாலும் காரியம் தோன்றாது. அந்தக் காரணங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஆகும்.

பானை என்ற காரியப்பொருளுக்கு மண் முதற் காரணம், திரிகை துணைக்காரணம், குயவன் நிமித்த காரணன். இவ்வுவமை அடிப்படையில் உலகற்கு மண் போல மாயை முதற்காரணம், திரிகை போல இறைவனது அருள் (சக்தி) துணைக்காரணம், குயவன் போல அவ்விரு காரணங்களின் வேறாய் இறைவன் நிமித்த காரணனாய் நின்று இவ்வுலகைத் தோற்றுவிக்கின்றான் என்பதை மேற்கூறிய பாடல் தெளிவுபடுத்துகின்றது.

குடத்திற்குக் குயவன் போல உலகிற்கு இறைவன் நிமித்த காரணன் எனக் கூறப்படும் உவமை பற்றி 'இறைவன் உலகிற்கு நிமித்த காரணமாய் நிற்பானாயின் அவனும் குயவன் முதலிய நிமித்த காரணர் போல வினைக்கு ஏற்ற உடம்பைப் பெற்று அவ்வினையின் பயனை நுகரும் கட்டுடையனாவன்' என்ற கருத்து எழும் அதற்கு விடையாக சிவஞானபோத முதற்சூத்திர முதல் அதிகரண உதாரண வெண்பா உரையில் சிவஞானமுனிவர் "காரியத்திற்கு நிமித்த காரணர் ஆவார் இருவகையினர். ஒரு வகையினர் கரணத்தாற் செய்பவர், மற்றொரு வகையினன் சங்கற்ப மாத்திரையாற் செய்பவன் என்றாலும் சங்கற்ப மாத்திரையால் செய்யும் நிமித்த காரணன் இறைவன் ஒருவனே ஏனையொர் எல்லாம் கரணத்தாற் செய்பவர்களே. கரணத்தாற் செய்பவர்களே விகாரங்களை எய்திக் கட்டுறுவர். அவ்வாறு காரணத்தாற் செய்யாது, சங்கற்ப மாத்திரையானே செய்தலின், இறைவன் விகாரம் எய்துதலும், கட்டுறுதலும் இலன் என்பதாம் " (அருணைவடிவேல், 1991). சங்கற்ப மாத்திரையாற் செய்தலாவது "இது இவ்வாறு ஆகுக என நினைத்த அளவிலே அது அவ்வாறாகச் செய்தல்" என்பதாகும். இதில் குடம் செய்பவனுக்கும் இறைவனுக்குமான வேறுபாட்டினை எடுத்துரைக்கின்றார்.

## மாயையே முதற்காரணம்

ஒரு செயலுக்கு முதன்மையான தேவையாக இருப்பதே முதற்காரணம். அந்த வகையில் உலகத் தோற்றத்திற்கு முதற்காரணம் மாயையே என்பது சைவத்தின் கருத்து. உலகமானது அறிவு இல்லாதது. அறிவு இல்லாத இந்த உலகத்திற்கு மூலப்பொருளும் அறிவு இல்லாத மாயையே. இறைவன் ஒருபோதும் முதற்காரணமாவது இல்லை என்பதை சைவ சித்தாந்தம் மாயாவத மறுப்பின் வாயிலாக நிலை நிறுத்துகின்றது.

## காரியப்பாட்டின் வகைகள்

சமூகம், ஆரம்பம், விவர்த்தனம், விருத்தி என்பன காரியப்பாட்டின் வகைகளாகும். சுருங்கியிருந்த காரணப்பொருள் பின் விரிந்து நின்று காரியமாதற்கு விருத்தி என்பது. மண் குடமாவது, பால் தயிராவது போல உருமாருதல் பரிணாமம். நூல் ஆடையாவது, மலர் மாலையாவது போல்வன ஆரம்பம். எள் குவியலாவது போன்றது சமுதாயம். இப்பி வெள்ளியாவதும், கயிறு பாம்பாவதும் போல்வன விவர்த்தனம். (அருணைவடிவேல், 2012)

காரண காரிய சம்பந்தத்தில் சைவ சித்தாந்தம் இரண்டு முறைகளைக் கையாளுகின்றது. மண் காரணமாக நீர் என்னம் காரியம் வெளிப்படுதல், களிமண் காரணமாக குடம் என்னும் காரியம் வெளிப்படுதல் (அருணைவடிவேல், 1991) இவ்விரண்டு உதாரணங்களிலும் காரண - காரிய வேறுபாடு உண்டு. மண்ணாகிய தடை நீங்கி நீர் வெளிப்படுதல், மண்ணில் குடம் தோன்றுதல் என்பதாக இருவேறு காரியப்பாட்டு முறைகள் உள்ளன. இருவகை உதாரணங்களை எடுத்துக்காட்டி சிவஞானமுனிவர் "முன்னர்த் தூலவடிவிற்றாய் நின்று பின் வெளிப்பட்டதன் கண் வெளிப்பட்டதென்னும் உணர்வும் முன்னர்ச் சூக்கும வடிவிற்றாய் நின்று பின்னர்த் தூல வடிவிற்றாய் வெளிப்பட்டதன் கண் உண்டாயிற்று என்னும் உணர்வு நிகழ்தல்" (மணி, 2001) என்பது.

மண்ணிலிருந்து நீர் வெளிப்படுதல் தூலவடிவமாக இருந்து தூலமாகவே வெளிப்பட்டது எனவும், மண்ணில் குடம் உண்டானது சூக்குமமாக இருந்து தூலமாக வெளிப்பட்டது என்றார். மேலும் விளக்குகிற காலத்தில் நீர் வெற்றுப்பொருள் தடை நீங்கி காரியப்பட்டதால் வெளிப்பட்டது எனவும் சூக்குமமாக நின்ற குட நிலையானது தடையாக இருந்து அது காரியப்படுத்தப்பட்டதால அதனைத் தோன்றியது என்றும் முனிவர் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

இந்திய மெய்யியல் மரபில் அனைத்து சமயங்களும் பொருட்களின் காரண காரிய நிலை பற்றி பேசுகின்றன. குறிப்பாக உலகத் தோற்றத்தில் காரண காரிய நிலைகள் குறித்து பெரிய விவாதமே நிகழ்ந்துள்ளதைக் காணலாம். அந்த நிலையில் சைவ சித்தாந்தம் மாயை உலகமாகக் காரியப்படுவதில் காரணங்களாக எவை எல்லாம் அமைகின்றன என்பதை விளக்கிச் செல்கின்றன. முதல் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்ற மூன்று காரணங்களால் உலகம் காரியப்படுத்தப்படுகின்றது என்பதை தர்க்கங்களின் அடிப்படையில் சைவம் விளக்குகின்றது.

## References


அருணைவடிவேலு, சி. (1991) சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அருணைவடிவேலு, சி. (2012) சித்தாந்த வினா விடை, தருமையாதீனம்.

சுந்தரமூர்த்தி, கு. (1989) சிவஞான சித்தியார் சுபக்கம், அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம், திருநெல்வேலி

நந்தினி சண்முகலிங்கம், யாழ், (2018) சைவ சித்தாந்தத்தின் காரண காரியக் கொள்கை, மேன்மை வெளியீடு, சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License